மார்க்கெட் விலையைக் கட்டுப்படுத்தவோ, குறைக்கவோ நமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. நாம் மத்திய சர்க்காரிடம் நமது மாநிலத்தில் கொள் முதல் செய்யப்படுகிற மொத்த சர்க்கரையில் 50 சதவிகிதமாவது நமது மாநில உபயோகத்திற்காக என்று நமக்கு விடுவித்துவிட வேண்டும் என்று வற்புறுத்திவருகிறோம். ஆனால், அவர்கள் நமக்கு பத்தாயிரத்து எண்ணூறு டன் தான் கொடுக்கிறார்கள். அதுவும் இவ்வாண்டு ஒன்பதாயிரத்து முந்நூறு டன்னுக்குக் குறைத்து விட்டார்கள். இதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்ல, கூட்டுறவு மூலம் விநியோகிக்கிற சர்க்கரைக்கு விலை கிலோவுக்கு 2 ரூபாய்க்குமேல் போகக்கூடாது என்பதையும் நாம் வற்புறுத்தினோம். அவர்கள் ரூ. 2.15 ஆக நிர்ணயித்திருக்கிறார்கள். விலையைப்பற்றிக் கூடப் பரவாயில்லை. நாம் 90 ஆயிரம் கார்டுகள் வைத்திருக்கிறோம். இன்னும் அதிக அளவுக்கு கூட்டுறவு மூலம் சர்க்கரை விநியோகம் செய்ய மத்திய சர்க்கார் நமது மாநிலத்திற்கு—நமது மாநிலத்தில் கொள்முதல் செய்கிற சர்க்கரையில் 50 சதவிகிதத்தை ஒதுக்கிவிட வேண்டும் என்பதாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் அதிகம் கொடுத்தால் நாமும் கூட்டுறவு மூலம் இன்னும் அதிக அளவுக்கு சர்க்கரை விநியோகம் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது. மு.ப. 10-00

திரு. ஆர். பொன்னப்பநாடார்: நமது மாநிலத்தின் தேவை எவ்வளவு? அந்தத் தேவைக்கு இன்னும் எவ்வளவு குறைவாக இருக்கிறது? அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு மத்திய அரசாங்கம் அவர்களுடைய கொள்கையை புனர் பரிசீலனை செய்வதற்கு இன்னும் அதிகமாக நம்முடைய மாநில அரசாங்கம் 'பிரஷர்' கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உற்பத்தியாவதில் 50 சதவிகிதம் கொடுத்தால் தேவைக்குச் சரியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். 12,000 டன்னாவது கொடுக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறோம். இதை எழுதியதற்குப் பிறகுதான் 10,800 டன் என்று கொடுத்துகொண்டு இருந்ததை 9,300 ஆக ஆக்கியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, சர்க்கரை விநியோகம் செய்வதில், நம்முடைய நாட்டிற்குத் தேவைப்படுகின்ற அளவை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே 10,000 டன் கொடுக்கப் பட்டிருந்தது. இப்போது 9,000 ஆக குறைக்கப்பட்டிருக்கிறதென்பதால்

தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது. லெவி ஷுகர் கொடுக்கின்ற முறையிலே மத்திய அரசாங்கத்தினுடைய ரூல்ஸ் எல்லாம் மிகவும் ரிஜிடாக இருக்கின்றன. வெளியே வாங்குவதற்கும் பல்க் கன்ஸ்யூமர்ஸ் கஷ்டப்படுகிறார்கள். சந்தர்ப்பம் ஏற்படுவதற்கில்லை. ஆகையினால் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மத்திய அரசை வற்புறுத்தி இங்கிருக்கிற மக்களுடைய அதிருப்தியை மத்திய அரசுக்கு இந்த அரசு அறிவிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசு உணவு அமைச்சரிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தினார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு நம்முடைய சர்க்கரை ஆலைகளிலே ஏராளமாக உற்பத்தியாகிறது. இந்த உற்பத்தியை நமக்கென்று ஒதுக்கி நம்முடைய தமிழ் நாட்டு தேவைக்குக் கொடுத்து விட்டால் இந்தப் பிரச்னைகள் எல்லாம் வராது என்றும் அதே சமயத்திலே 70 சதவிகிதம் லெவி என்றும் கொடுத்து, இந்த லெவியை கிராமங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். அந்தக் கிராமங் களிலுள்ள பல்க் கன்ஸ்யூமர்ஸ் ஹோட்டல், டீ கடைக்காரர்கள்தான். கிராமங் களிலும் நகரங்களிலும் அவர்களுக்கு சர்க்கரை வழங்குவதற்கு அனுமதி யில்லாத உத்தரவையும் போட்டுவிட்டு ஏழைகளுக்குக் குறைந்தவிலையில் கொடுக்கிறோம் என்ற உத்தரவையும் போட்டுவிட்டு, அதன் விளைவாக பல்க் கன்ஸ்யூமர்ஸ்ஸுக்குக் கொடுப்பதற்கு அதிகமான விலைக்கு வாங்கி, கள்ளச் சந்தையிலே விற்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக, பல்க் கன்ஸ்யூமர்ஸுக்குக் கொடுக்கின்ற முறையையும் கொண்டுவர வேண்டும்.

மத்திய அரசினுடைய கொள்கையிலே இன்னொரு குறை இருக்கிறது. ஆலை முதலாளிகளிடத்திலே 70 சதவிகிதம் வாங்குகிறார்கள். அதை மிகவும் குறைந்த விலையிலே வாங்குகிறார்கள். இதனால் ஆலை முதலாளிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. அதைச் சரிக்கட்டுவதற்காக ஆலை முதலாளிகளுக்கு ஒரு சலுகை. மீதி இருக்கிற 30 சதவிகிதத்தை என்ன விலைக்கு வேண்டு மானாலும் விற்றுக்கொள்ளலாம் என்று. பல்க் கன்ஸ்யூமர்ஸ் சொல்கின்ற விலை மிக அதிகமாக இருக்கிறது. நாம் கொடுப்பதாகத் திட்டமிட்டிருக்கிற 70 சதவிகிதத்தினுடைய விலை கட்டுப்படியாகாத விலையில் இருக்கிறது. அந்த இரண்டுக்கும் இடையில் இருக்கிற ஏற்றத்தாழ்வுதான் கள்ளச் சந்தைக்குக் காரணம். மத்திய அரசாங்கம் இதில் தன்னுடைய பிடிப்பை விட்டுவிட்டு மாநில அரசாங்கத்திடமே விட்டுவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசினர் அதைப் பரிசீலிப்பார் களா என்று தெரியவில்லை.

(பல உறுப்பினர்கள் கைகளை உயர்த்தினர்).